

# ஸ்ரீநிவாச திருக்கல்யாணம்

அன்பர்களே புரட்டாசி மாதத்தை ஏன் பெருமாளுக்கான மாதம் என்று குறிப்பிடுகிறார்கள்?

பெருமாளுடைய அம்சமாக கருதக்கூடிய கிரகம் புதன். அந்த புதனுடைய வீடு கன்னி. இந்தக் கன்னியில் சூரியன் வந்தமர்வது புரட்டாசி மாதத்தில். ஆகவே தான் இந்த புரட்டாசி மாதத்தில் ஏழுமலையானுக்கு பிரம்மோற்சவங்கள் நடைபெறுகிறது.

புதனுக்கு வெகு நட்பு கிரகம் என்பது சனி பகவான். அதனால் தான் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

இப்பொழுது புரிகிறதா? புரட்டாசி மாதம் ஏன் பெருமாளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது என்று.

அதே முக்கியத்துவம் நம் ஏழுமலையானுக்கு நம் 'ஆலயம் தொழுவோம்' பக்கத்தில் நாம் கொடுக்க வேண்டாமா?

நாளை முதல் இனிதே ஆரம்பமாகிறது ஏழுமலையானின் மகிமைகளைப் போற்றும் புராணமாகக் கொண்டாடும் 'ஸ்ரீநிவாச திருக்கல்யாணம்'.

ஏழுமலையான் பற்றி தெரிந்து கொள்வதற்கே புண்ணியங்கள் பெற்றிருக்க வேண்டுமாம். நாம் ஏழுமலையானின் திருமண வைபவங்களையும், லீலைகளையும் அனுபவிக்க இருக்கிறோம் என்றால்? ஏழுமலையானின் பூரண அருட்கடாட்சத்தை நாம் பெறத் தயாராக இருக்கிறோம் தானே!.

புரட்டாசி மாதத்தில் ஏழுமலையானின் திருவிளையாடல்களையும், மகிமைகளையும் மட்டுமல்லாது, திருக்கல்யாணம் என்றாலே ஏழுமலையானின் திருக்கல்யாணம் தான். ஏழுமலையான திருப்பதியில் தினம் தினம் திருக்கல்யாண உற்சவம் "பத்மாவதி திருக்கல்யாணம்" என்னும் பெயரில் நடைபெறுகிறது.



நித்திய கல்யாணம் கண்டருளும் ஸ்ரீநிவாசனின் திருக்கல்யாண வைபோகத்தை 'ஸ்ரீநிவாச திருக்கல்யாணம்' என்னும் பெயரில் அனுபவிக்கலாம்.

அலர்மேல் மங்கை மணாளனே சரணம்!.

🌼✿ திருமலை தரிசனம் :-

"சிரவணம் கீர்த்தனம் விஷ்ணோ ஸம்ரணம் பாத சேவநம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்ம நிவேதனம்
இதிபும்ஸா அர்பிதா விஷ்ணோ பக்தி : சேவ நவ லக்ஷணா".

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் புகழைச் செவியாரக் கேட்பது - அவனுடைய கல்யாணகுண வைபவங்களை வாயாரப் பாடுவது, அவன் நாமாவை மனமார நினைப்பது - அவனுக்குத் திருத்தொண்டு செய்வது - அவனைப் புஷ்பத்தால் அர்ச்சிப்பது - அவன் திருவடிகளைத் தலையால் வணங்குவது - அன்பால் மெய்யுருகுவது - மனத்தால் தியானிப்பது - அவனுக்கு அடிமை பூண்டு வாழ்நாளைக் கழிப்பது நமக்கு நிலையான பேரின்பங்களையும், சகல சௌபாக்கியங்களையும் தந்தருள்வது அவனுடைய பொன்னான திருநாமத்தின் பிரபாவம் அன்றோ!

"விஷ்ணுவே பரம்பொருள்!" என்பது வேதவாக்கு! "நாராயணா!" என்று அவன் திருநாமத்தை ஜெபிப்போர்க்கு நலமெல்லாம் பொங்கிப் பெருகும். நாளெல்லாம் இன்பம் தங்கும்!

இக்கலியுகத்தில் ஸ்ரீவிஷ்ணு திருவேங்கடமுடையான் எனும் திருநாமத்துடன் - கண்

கண்ட தெய்வமாக - பக்தர்களைக் காத்தருளும் பரமதயாளனாக - கேட்ட வரம் தந்தருளும் கருணைக் கடலாக - அருள் வடிவினனாக - அலங்கார ரூப சுந்தரனாக - திருப்பதி எனும் திருமாமலையைத் தமது விஜய ஸ்தானமாக - நித்திய வாசஸ்தலமாகக் கொண்டு கோவில் கொண்டுள்ளார்.

இத்திருமலை 'ஸ்வயம் வக்த ஷேத்ரம்!' அதாவது பரந்தாமனே விரும்பி எழுந்தருளிய ஷேத்திரம்.

ஸ்ரீமந் நாராயணன் நித்தியவாசம் புரியும் இத்திருமலையில், "நித்ய கல்யாணம் பச்சைத் தோரணம்!" என்னும் பழமொழிக்கு ஏற்ப வருஷம் 365 நாட்களும் திருவிழாக் கோலம்தான்.

ஏழுமலைகளுக்கு அப்பால் கோவில் கொண்டிருக்கும் திருவேங்கடமுடையான் ஏழைகளை ரக்ஷிக்கும் கருணாகரன்! கலியுகவரதன்! புண்ணிய புருஷன்! புருஷோத்தமன்! குவலயம் போற்றும் கோவிந்தன்!

கோவிந்தா! கோவிந்தா! என்று உள்ளம் உருக அவனது திவ்யமங்களத் திருநாமத்தைக் கூவி அழைக்கின்றோம். அவன் நமது குரலைத் திருச்செவிகளிலே சங்கீர்த்தனமாக சாதித்துக் கொண்டு சகல ஐசுவரியங்களையும் நமக்கு வர்ஷிக்கின்றான்.

அனந்தனின் திருப்பாதம் பரமபதம்! அப்பாதார விந்தம்; பேரானந்தப் பெரு வெள்ளம்! அவன் திருநாமம் தேவாமிர்தம். அவன் தரிசனம் ஆனந்தம் என்றுமே பேரானந்தம். அவன் எழுந்தருளியிருக்கும் திருமலையோ பூலோக வைகுண்டம்.

இத்திருமலை ஸ்ரீசைலம் எனும் தலத்தில் துவங்கி அகோபிலத்தில் தொடர்ந்து படர்ந்து திருமலையில் முடிகிறது.



இப்பேர்ப்பட்ட வைபவங்களுடன் கூடிய திருக்கோவில் கர்ப்பக்கிருகத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஆஜானுபாகுவான திருத்தோற்றப் பொலிவுடன் ஒன்பது அடிக்கு மேல் உயர்ந்து காணப்படுகிறார்.

திருவரங்கத்திலே - பள்ளிகொண்ட பேரழகு
திருக்கோவிலூரில் - உலகளந்த திருமேனி
திருநாங்கூர் - திருமணிமாடக்கோவிலில் அமர்ந்த திருக்கோலம்
திருப்பதியிலே - நின்ற திருக்கோலம்

திருவேங்கடமுடையானின் திருக்கோல வைபவம் தான் எத்தனை அழகு! எத்தனை சாந்நித்யம்? எத்தனை பேரானந்த சுக்ரதம்.

திருமலை தரிசனம் கண்ட நாம், அத்திருமலை எங்ஙனம் பூலோகத்திற்கு வந்தது? ஸ்ரீநிவாசன் எதனால், எதற்காக இங்கு எழுந்தருளினார்? என்பது போன்ற பல வைபவங்களைச் சொல்லும் புராண மகிமைகளை அறிந்து கொள்ள வேண்டாமா?

அப்புராணங்கள் சொல்லும் திருவேங்கடமுடையானின் பிரபாவங்களைக் கற்பதும், கேட்பதும், சொல்வதும் நமக்கு சகலவிதமாக ஆயுள், ஆரோக்கிய, ஐஸ்வரியத்தைக் கொடுக்கும்.

கோவிந்தா! கோவிந்தா! என்று அழைத்து அவனது பரிபூரண அருளைப் பெறுவோமாக!

நாளை - ஆதிவராகர் வைபவம்.

அலர்மேல் மங்கை மணாளனே சரணம்!.

